## ஓம் ஈஸ்வராய நமஹ!

## ஓம் ஸ்ரீ ஸ்ரீ பரிமளாதேவி அஷ்டோத்திர சதநாமாவளி

1. ஓம் அண்டத்து நாயகியே போற்றி
2. ஓம் அவதார அன்னையே போற்றி
3. ஓம் அன்புள்ளம் கொண்டவளே போற்றி
4. ஓம் அகங்காரம் அழிப்பவளே போற்றி
5. ஓம் அமிர்தம் அருளிடும் ஆற்றலே போற்றி
6. ஓம் அங்குச பாசம் தரித்தவளே போற்றி
7. ஓம் ஆதிபராசக்தியே போற்றி
8. ஓம் ஆனந்தம் அளிப்பவளே போற்றி
9. ஓம் ஆகமம் உணர்த்திடும் தேவியே போற்றி
10. ஓம் ஆன்மாக்களை ரக்ஷிக்கும் ஜகன்மாதா போற்றி
11. ஓம் ஆன்ம விடுதலை அளிப்பவளே போற்றி
12. ஓம் ஆதரித்து ஆட்கொள்ளும் ஆதியே போற்றி
13. ஓம் இகபர சுகம் அருளாலும் அம்மையே போற்றி
14. ஓம் இன்னல்கள் நீக்கிடும் இச்சாசக்தியே போற்றி
15. ஓம் இறையாற்றல் பெருக்கிடும் இறைவியே போற்றி
16. ஓம் இயக்கம் மலர்த்திடும் இயற்கையே போற்றி
17. ஓம் ஈசனின் அருவுருவே போற்றி
18. ஓம் ஈகைக்குணம் நிறைந்தவளே போற்றி
19. ஓம் ஈரேழு உலகினை காப்பவளே போற்றி
20. ஓம் ஈசான்யம் உணர்ந்தவளே போற்றி
21. ஓம் உபதேசம் அருளிடும் குருவே போற்றி
22. ஓம் உயர்வுகள் நல்கிடும் உத்தமியே போற்றி
23. ஓம் உலகம் உய்வுற உதித்தவளே போற்றி
24. ஓம் உள்ளத்தில் குடிக்கொண்ட உமையவளே போற்றி
25. ஓம் ஊசிமுனை தவமியற்றும் கன்னிகையே போற்றி
26. ஓம் ஊழ்வினை போக்கிடும் சக்தியே போற்றி
27. ஓம் எழுச்சியோடு இயங்கிடும் நங்கையே போற்றி
28. ஓம் எதிர்வினை அழித்திடும் ஈஸ்வரியே போற்றி

Copyright © 2020 Gnanalayam 

29. ஓம் ஏழாம் திரை நீக்கும் கிரியா சக்தியே போற்றி
30. ஓம் ஏகாந்தம் ஈந்திடும் ஞானசக்தியே போற்றி
31. ஓம் ஐம்புலன் அடங்கிட அருள்பவளே போற்றி
32. ஓம் ஒளி ரூபம் தரித்தவளே போற்றி
33. ஓம் ஒளிப்பாலம் அமைத்தவளே போற்றி
34. ஓம் ஒன்றான பரம்பொருளே போற்றி
35. ஓம் ஓம்காரம் இசைப்பவளே போற்றி
36. ஓம் ஔடதம் அருளிடுவாய் போற்றி
37. ஓம் கரும்பாய் இனிப்பவளே போற்றி
38. ஓம் கலியினை மாய்ப்பவளே போற்றி
39. ஓம் கதிரவனின் ஒளிப்பிழம்பே போற்றி
40. ஓம் காலத்தை வென்றவளே போற்றி
41. ஓம் காருண்யம் நிறைந்தவளே போற்றி
42. ஓம் காவியம் படைப்பவளே போற்றி
43. ஓம் சச்சிதானந்த ரூபிணியே போற்றி
44. ஓம் சாந்தஸ்வரூபியே போற்றி
45. ஓம் சுயத்தினை உணர்ந்தவளே போற்றி
46. ஓம் சுகமளிக்கும் தேவதையே போற்றி
47. ஓம் சூளுரைக்கும் சுந்தரியே போற்றி
48. ஓம் சூத்திரங்கள் இயற்றுபவளே போற்றி
49. ஓம் ஞானம் புகட்டிடும் ஞானியே போற்றி
50. ஓம் ஞானாலயத்தில் உறைகின்ற தெய்வமே போற்றி
51. ஓம் ஞாயிறு குலத்தில் உதித்தவளே போற்றி
52. ஓம் ஞாலத்தினை ஏற்றிட்ட நான்மறையே போற்றி
53. ஓம் தட்சிணாமூர்த்தி ஸ்வரூபமே போற்றிய
54. ஓம் தயாபர தாட்சாயணியே போற்றி
55. ஓம் தாமரையாய் மலர்பவளே போற்றி
56. ஓம் திரைகளை நீக்குபவளே போற்றி
57. ஓம் தீட்சண்யச் சுடரொளியே போற்றி
58. ஓம் தென்னகத்தின் விண்மீனே போற்றி
59. ஓம் தெளிவு கண்ட அகஒளியே போற்றி
60. ஓம் தொழுதிடும் அடியோரைக் காப்பவளே போற்றி
61. ஓம் நற்கதி அளிப்பவளே போற்றி

62. ஓம் நாகர்குலம் தொழுதிடும் நாகாபரணியே போற்றி
63. ஓம் நிர்மலமானவளே போற்றி
64. ஓம் நீங்காப் புகழ் உடையவளே போற்றி
65. ஓம் நூதனமானவளே போற்றி
66. ஓம் நேயம் வளர்ப்பவளே போற்றி
67. ஓம் பரிமீது வலம்வரும் தேவியே போற்றி
68. ஓம் பாரினை வென்றவளே போற்றி
69. ஓம் பிணிகளைப் போக்கிடும் பாவையே போற்றி
70. ஓம் பிறவாவரம் நல்கிடுவாய் போற்றி
71. ஓம் புவியாளும் புவனமாதா போற்றி
72. ஓம் பேருவகை அளித்திடும் பெண்ணரசியே போற்றி
73. ஓம் மண்ணுலகம் தொழுபவளே போற்றி
74. ஓம் மறைப்பொருளை மீட்பவளே போற்றி
75. ஓம் மாயைதனை நீக்குபவளே போற்றி
76. ஓம் மானுடகுலம் காப்பவளே போற்றி
77. ஓம் மும்மலம் அகற்றிடும் முதல்வியே போற்றி
78. ஓம் மெய்ஞானம் அருள்பவளே போற்றி
79. ஓம் மேன்மைமிகு குரு அன்னையே போற்றி
80. ஓம் யுகங்கள் பல கண்டவளே போற்றி
81. ஓம் யுகமாற்றம் நிகழ்த்திடும் யுவதியே போற்றி
82. ஓம் வன முல்லையே போற்றி
83. ஓம் வரங்களைப் பெற்றிட்ட வானவியே போற்றி
84. ஓம் வரங்களை நல்கிடும் வாசவியே போற்றி
85. ஓம் வானுலகம் போற்றிடும் பரதேவதையே போற்றி
86. ஓம் விண்ணிலே நாமம் கண்டவளே போற்றி
87. ஓம் விண்ணையும் மண்ணையும் இணைப்பவளே போற்றி
88. ஓம் விடையேறி நின்றிடும் துர்கையே போற்றி
89. ஓம் வெற்றியை ஈட்டிடும் வேள்வியே போற்றி
90. ஓம் வேதங்கள் அருளிய வித்தகியே போற்றி
91. ஓம் பாரத்வாஜ மகரிஷியின் புத்திரியே போற்றி
92. ஓம் அகத்திய மகரிஷியின் மகளாரே போற்றி
93. ஓம் ஆறுமுகனின் அன்னையே போற்றி
94. ஓம் காலாங்கி சித்தரின் சகியே போற்றி

95. ஓம் காகபுஜண்ட மகரிஷியின் மங்கையே போற்றி
96. ஓம் கொங்கணச் சித்தரின் குலக்கொழுந்தே போற்றி
97. ஓம் கோரக்கச் சித்தரின் கோமகளே போற்றி
98. ஓம் போகரும் புலிப்பாணியும் புகழ்பவளே போற்றி
99. ஓம் நவசித்தர்கள் போற்றிடும் ஆதிநாயகியே போற்றி
100. ஓம் தேவியர் புடை சூழும் நவசக்தியே போற்றி
101. ஓம் சிவத்தினை ஏற்றிடும் சிவசக்தியே போற்றி
102. ஓம் சிவகணங்கள் தொழுதிடும் சிந்தாமணியே போற்றி
103. ஓம் மருத்துவம் நல்கிடும் மாமணியே போற்றி
104. ஓம் புற்றினை களைந்திடும் புற்றரசியே போற்றி
105. ஓம் அகிலம் ஆண்டிடும் அம்பிகையே போற்றி
106. ஓம் ரேணுகா தேவியாய் அவதரித்தவளே போற்றி
107. ஓம் மங்களம் அருளிடும் எங்கள் குலதெய்வமே போற்றி
108. ஓம் ஸ்ரீ பரிமளா தேவியே போற்றி போற்றி

**ஸ்ரீ பரிமளாதேவி அஷ்டோத்திர சதநாமாவளி சம்பூர்ணம்.**